கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.
முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, திருச்செங்கோடு.
2025–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19–ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் மாசி மாதம் 07–ஆம்நாள்

**அசல் வழக்கு எண்.530/2023**

[CNR.No.TNNM06-001496-2023]

K.சந்திரன்(38)
த/பெ கந்தசாமி
க.எண் 2/31–1, வசந்த நகர்,
குமரமங்கலம், மண்டகப்பாளையம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம். .... வாதி

// எதிராக //

A.பாரதி(46)
க/பெ ஆனந்தன்,
க.எண் 91/1, கோல்டன் சிட்டி,
சிறுவலூர் அஞ்சல், கோபி வட்டம்,
ஈரோடு மாவட்டம். .... பிரதிவாதி

அசல் வழக்கானது கடனுறுதிச்சீட்டின்பேரில் தாவா தொகை, பின்வட்டி மற்றும் செலவுதொகை வேண்டி வாதியால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| Date of Presentation | : | 22.11.2023 |
| Date of filing | : | 08.12.2023 |
| Value of Suit | : | Rs.4,76,875.00 |
| Court Fee paid U/Sec.22 of TNCF Act | : | Rs. 14307.00 |
| Cause of action | : | 16.11.2021. |

இவ்வழக்கு கடந்த 22.11.2023 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 08.12.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 17.02.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.M.விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.C.கோவிந்தராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால், கடந்த 19.11.2024 ஆம் தேதி ஒருதலைபட்சநிலைக்கு உட்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், வழக்குரை, சான்றாவணங்கள், வழக்கு கோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கு செலவுதொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. வழக்குரை தொகை ரூ.4,76,875/– தொகையினையும், அசல் தொகை ரூ.3,50,000/– தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த 22.11.2023 நாள்முதல் தீர்ப்பாணை நாளான 19.02.2025 ஆம் நாள்வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவு தொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.
3. வாதிக்கு, பிரதிவாதி செலவுதொகையாக ரூ. 18127/– செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

<u>செலவுபட்டியல்</u>

| | | வாதி | பிரதிவாதி |
|---|---|---|---|
| வழக்குரைக்கான ஸ்டாம்ப் | : | 14307.00 | –– |
| வக்காலத்திற்கான ஸ்டாம்ப் | : | 10.00 | –– |
| விண்ணப்பத்திற்கான கட்டணம் | : | -- | –– |
| வழக்கறிஞர் கட்டணம் | : | 3660.00 | –– |
| இளம்வழக்கறிஞர் கட்டணம் | : | -- | –– |
| இடையில் கொடுக்கப்பட்ட மனுக்களின் செலவுத்தொகை | : | -- | செலவுபட்டியல் தாக்கல் இல்லை. |
| ஆணையர் கட்டணம் | | -- | |
| கட்டளைப்படி | : | 50.00 | –– |
| எழுத்துக்கூலி | : | 100.00 | –– |
| மொத்தம் | : | 18127.00 | –– |

சொத்து விவரம் – இல்லை

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19–ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.02.19 18:55:31 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.